செ.வெ.எண்: 133

நாள்: 19-02-2012.

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 30.12.2011 அன்று தமிழகத்தை தாக்கிய 'தானே' புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (19.02.2012) ஜெயா தொலைக்காட்சியின் சார்பாக அதன் துணைத் தலைவர் (நிர்வாகம்) திரு. ரங்கநாதன், துணைத் தலைவர் (செய்தி) திரு. சுனில், துணைத் தலைவர் (மார்க்கெட்டிங்) திரு. பாலசாமிநாதன், துணைத் தலைவர் (புரோகிராம்) திரு. பிரகாஷ் ஆகியோர் ஜெயா தொலைக்காட்சி ஊழியர்களின் ஒரு நாள் ஊதியமான 1 லட்சத்து 81 ஆயிரத்து 46 ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்கள்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 105 கோடியே 68 லட்சத்து 02 ஆயிரத்து 148 ரூபாயாகும்.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள் : 19.02.2012.